**எண்.5/7/4/6/பதிவாளர்/பால்வளம்/2023/PF-I/149**
**புதுச்சேரி அரசு**
**கூட்டுறவுத்துறை (பால் வளம்)**
**வி.வி.பி. நகர், தட்டாஞ்சாவடி, புதுச்சேரி - 605 009.**
----

புதுச்சேரி, நாள். 27.09.2023

**கூட்டுறவு சங்கங்களின் சட்டம் 1972, சட்டம் எண்.81 கீழ் கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் அவர்களால் பிறப்பிக்கபட்ட வழிகாட்டுதல்**

பொருள்: பிரதம கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்கங்கள் - நிர்வாக குழுவில் ஏற்படும் எதார்தமான காலி இடத்தை(Casual Vacancy) நிரப்புவதற்கு முன் பின்பற்ற வேண்டிய வழிமுறைகள் வழிகாட்டுதல் - தொடர்பாக.

***

புதுச்சேரி கூட்டுறவு சங்கங்களின் சட்டம் 1972-ன் படி ஒவ்வொரு கூட்டுறவு சங்கங்கமும் தங்களது சங்கத்தை மூன்று ஆண்டு காலங்கள் நிர்வகிக்க தேர்தல் நடத்தி ஒன்பது இயக்குநர்கள் கொண்ட நிர்வாக குழுவை தேர்தல் மூலம் தேர்ந்துதெடுப்பது தாங்கள் அறிந்ததே.

பிரதம கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்கங்களைப் பொருத்தவரையில் அவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய இயக்குநர்கள் சில தகுதிகளை பெற்று இருத்தல் அவசியமாகும். குறிப்பாக கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்க துணை விதி எண் 7-ல் குறிப்பிட்டுள்ளது போல் முந்தைய கூட்டுறவு ஆண்டில் அதாவது தேர்தல் நடக்கும் ஆண்டிற்கு முன் ஏப்ரல் 1-ஆம் தேதி துவங்கி மார்ச் மாதம் 31-ஆம் தேதி வரையிலான காலத்திற்கு துணைவிதியில் வரையறுக்கப்பட்டுள்ள அளவு பால் மற்றும் அதில் கூறியுள்ள நாட்கள் உறுப்பினர்கள் சங்கத்திற்கு பால் வழங்கி இருத்தல் அவசியமாகும்.

அவ்வாறு முந்தைய கூட்டுறவு ஆண்டில் பால் வழங்கிய உறுப்பினர்கள் மட்டுமே தேர்தலில் போட்டியிடவும், தேர்தலில் வாக்கு அளிக்கவும் தகுதி உடையவராவார்கள்.

அவ்வாறு தேர்தலில் நின்று வெற்றி பெற்றோ அல்லது போட்டியில்லாமல் (unopposed) தேர்ந்தெடுக்கப்படும் 9 நிர்வாக குழு இயக்குநர்கள் தங்களுக்குள்ளாக சங்கத்தின் தலைவர் அவர்களுக்குள் தேர்தல் மூலம் தேர்ந்தெடுத்து அதனை தீர்மான நகலுடன் கூட்டுறவு சங்க பதிவாளர்கள் அவர்களுக்கு தெரிவித்தல் அவசியம்.

அவ்வாறு ஒன்பது இயக்குநர்கள் கொண்ட நிர்வாகக்குழு அமைத்தபின் சந்தர்ப்ப சூழல் காரணமாக இயக்குநர் இறப்பு, இராஜினமா மற்றும் இதர காரணங்களுக்காக ஏதேனும் தேர்ந்தெடுக்கப்பட்ட இயக்குநர் பதவி காலியானால் (Casual vacancy) காலியாக உள்ள இயக்குநர் இடத்தை நிரப்புவதற்கு நியமன முறையில் (co-option) மீதமுள்ள இயக்குநர்கள் முடிவு செய்து அந்த இடத்திற்கு ஒரு உறுப்பினரை நிரப்புவது வழக்கில் உள்ளதை தாங்கள் அறிந்ததே.

அவ்வாறு காலி இடத்தை நிரப்புவதற்கு முன் துணை விதியில் கூறியுள்ள தகுதி வரம்புபினை இயக்குநராக தேர்ந்தெடுக்க உத்தேசிக்கப்பட்டுள்ள உறுப்பினர் பெற்று இருத்தல் அவசியம்:

(i) துணை விதி 7-ல் குறிப்பிட்டுள்ள அளவு பால் மற்றும் அதில் கூறியுள்ள நாட்கள் சங்கத்திற்கு முந்தைய கூட்டுறவு ஆண்டில் பால் ஊற்றி இருத்தல் வேண்டும்.

(ii) புதுச்சேரி கூட்டுறவு சங்கங்களின் சட்டம் 1972 அதன் விதிகளின்படியும், துணை விதிகளின்படியும் தேர்தலில் நிற்க தகுதி பெற்று இருத்தல் அவசியம்.

(iii) Co-option-ல் தேர்ந்தெடுக்கப்படும் இயக்குநர் எழுத படிக்க தெரிந்து இருத்தல் அவசியம்.

OFFICE OF THE REGISTRAR OF CO-OPERATIVE SOCIETIES PUDUCHERRY

தொடர்ச்சி/-

(iv) சம்பந்தப்பட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்கத்திலோ இதர கூட்டுறவு நிறுவனங்களிலோ கடன் பெற்று தவணை கடந்த பாக்கிதாரராகவோ அல்லது டிகிரி செய்யப்பட்ட தவணை கடந்த ஜாமீன்தாரராகவோ இருக்கக்கூடாது.

(v) சங்கத்தின் கடந்த இரண்டு நிர்வாக குழுவில் தொடர்ந்து நிர்வாக குழு உறுப்பினராக இருந்திருக்க கூடாது.

(vi) புதுச்சேரி கூட்டுறவு சட்டம் 1972 மற்றும் விதிகள் 1973-ன் படி தேர்ந்தெடுக்கப்படும் நிர்வாக குழு உறுப்பினர் எவ்வித தகுதியிழப்பும் இல்லாதவராக இறுத்தல் வேண்டும்.

எனவே இனி வரும் காலங்களில் மேற்கூறிய வழிகாட்டுதலை பின்பற்றி (Casual Vacancy) ஏற்படும் நிர்வாக குழு உறுப்பினர்க்கான காலி இடத்தை நியமன முறையில் (Co-option) நிரப்ப வேண்டும் என அறிவுறுத்தப்படுகிறது.

அவ்வாறு நிகழ்ந்திடும் நிர்வாக குழுவின் மாற்றத்தை இவ்வலுவலகத்திற்கு அவ்வாறு மாற்றம் ஏற்பட்ட 7 தினங்களுக்குள் தீர்மான நகலுடன் தெரியபடுத்த வேண்டும் என்பதை இச்சுற்றறிக்கை மூலம் அறிவுறுத்தப்படுகிறது.

OFFICE OF THE REGISTRAR OF CO-OPERATIVE SOCIETIES PUDUCHERRY

5/10

(ச. யஷ்வந்தய்யா)
கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர்

**பெறுநர்**

1. தலைவர்/நிர்வாகி,
   -------------------------------------------கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்கம் (அ) எண்.பி.
   புதுச்சேரி & காரைக்கால்.

**நகல் பெறுவோர்:**

1. மேலாண் இயக்குனர், புதுச்சேரி கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம், புதுச்சேரி
2. மேலாண் இயக்குனர், காரைக்கால் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம், காரைக்கால்.

} தக்க தொடர் நடவடிக்கைகாக.

3. துணைப்பதிவாளர், காரைக்கால்.
4. The Web Editor.
5. கோப்பு 2023.